பாடம் 5

மன்னிக்கும் அக்கினி

உன்னைப்பற்றிச் சொல்ல விருப்பமில்லாத ஒரு காரியத்தை நீ பிறரிடம் சொல்லியது உண்டா? தேவனுடைய தூதைச் செ ால்வதற்குத் தான் தகுதியற்றவன் என்று ஏசாயா தீர்க்கதரிசி எண்ணினார்.

ஏசாயா தீர்க்கதரிசி ஒரு நாள் ஆலயம் சென்றிருந்தார். அப்போது ஆலயத்திலே தேவனுடைய தரிசனத்தைக் கண்டார். பரலோகக் காட்சி அவருக்குக் காணப்பட்டது. அங்கே பரலோகத்தில் உயரமும் உன்னதமுமான இடத்திலே மிகவும் அழகுடன் விளங்கிய சிங்காசனம் ஒன்று காணப்பட்டது. அந்தச் சிங்காசனம் பளபளவென்று அழகுடன் மிளிர்ந்தது. அதில் ஆண்டவர் உட்கார்ந்திருந்தார்.

அவரது ஆடையின் தொங்கலால் தேவாலயமே நிறைந்து காணப்பட்டது. அவ்வளவு பெரியதாக தேவனுடைய வஸ்திரத் தொங்கல் இருந்தது. ஒரு புறத்தில் பலிபீடம் இருந்தது. அதிலே தகதக வென்று நெருப்புக் கனன்று கொண்டிருந்தது. மஞ்சளும் சிவப்புமாக அந்தத் தணல் அழகுடன் ஒளிர்ந்துகொண்டிருந்தது.

ஆறு செட்டைகளுடைய சேராபீன்கள் எனும் தூதர்கள் தேவனுக்கு மேலாக நின்றார்கள். அந்தத் தூதர்கள் இரண்டு செட்டைகளால் தங்களுடைய முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தங்கள் கால்களை மூடியிருந்தார்கள். தங்களின் இரண்டு செட்டைகளால் பறந்து கொண்டே, ஒருவரையொருவர் நோக்கி: ''சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பூமி அனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது'' என்று தேவனைப் போற்றிக்கொண்டிருந்தார்கள்.

தேவனுடைய ஆலயம் முழுவதும், தூதர்களின் அழகிய துதிப்பாடல்களால் நிறைந்திருந்தது. அந்தத்துதியினால் வாசல்களின் நிலைகள் அசைந்து



மன வசனம்

உன் அக்கிரமம் நீங்கி உன்
பாவம் நிவர்த்தியானது.
ஏசாயா 6:7.

ஆலயம் புகையினால் நிறைந்தது. ஏசாயா 6:2-4.

ஆனால், இப்போது ஏசாயாவின் மனதிலே, பயம் அதிகமாயிருந்தது. அப்போது ஏசாயா, ''ஐயோ! அதமானேன்; நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்; அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன். சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே'' என்று சொன்னார்.

அப்பொழுது சேராபீன்கள் எனப்படும் தூதர்களில் ஒரு சேராபீன் தூதன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து , ஏசாயாவிடத்தில்பறந்து வந்தான்.

அதினால், அவன் வாயை தொட்டு, ''இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால், உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவர்த்தியானது'' என்றான்.



அதன் பின்பு, ''யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று கேட்கிற தேவனுடைய குரல் கேட்டது.

ஓர் அற்புதமான உணர்வு அவரை முழுவதும் ஊடுருவியது. ஒரு நொடியில் அவரது பாவங்கள் அவரை விட்டு நீங்கிற்று. தேவ ஆசீர்வாதத்திற்காக தேவனுக்கு ஏசாயா நன்றி சொல்லுமுன்னமே, தேவன் மென்மையாக அவரிடம் பேசினார். நம்மை தேவன் தம் பிள்ளைகளாக நினைப்பதினால், ஒரு தகப்பன் கனிவுடன் தன் பிள்ளையிடம் பேசுவதுபோல் தேவன் ஏசாயாவுடன் பேசினார். ஏனெனில், மக்களுக்கு தேவனுடைய வார்த்தைகளைச் சொல்வதற்காக அவர், ''இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்'' என்றார்.

ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கும் மேலாக ஏசாயா தேவனுடைய ஊழியத்தைச் செய்து கொண்டுதான் இருந்தார்; ஆனால், இப்போது

செய்தி

நான் தேவகிருபையால் தொடப்படும்போது,தேவன் என் பாவங்களை மன்னிக்கிறார்.

அவருடைய வாழ்வில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. தேவனின் பிரசன்னம் அவரது வாழ்வில் மேலான மாறுதலைச் செய்திருந்தது. மற்றவர்களை மாத்திரம் பாவிகள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர் தன்னையும் அசுத்தன் என்று அறிக்கையிட்டார். தேவனுக்கு முன்பாகத் தன் நிலையை உணர்ந்ததால், தன்னைத் தாழ்த்தினார். தேவ ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்தார்.

ஏசாயா தன்னை உணரா திருந்த நிலையிலும் தேவன் அவர்மேல் அன்பாகத்தான் இருந்தார். உலகிலுள்ள ஒவ்வொருவரிடமும் தேவன் இவ்வாறு அன்பாகவே இருக்கிறார். அவர்களையும் திருத்தி, தம் முடைய ஊழியத்தைச் செய்ய அழைக்கிறார்.

என் அன்பு பிள்ளையே, தேவ ஊழியத் திற்கென்று உன்னை தேவடம் இன்றே அர்ப்பணிப்பாயா?

செய்முறை: **'யாரை நான் அனுப்புவேன்?' என்று தேவன் கேட்டபோது, ஏசாயா சொன்னது என்ன? முக்கோனங்களில் உள்ள எழுத்துகளை அடித்துவிடு; பதில் கிடைக்கும்.**

புதிர் 5



